பதிவு எண் — M. 5720 ௫ - வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர் : இளவழகனார்.

கிளை—4 திருதலம், மாம்பாக்கம்; கர, ஐப்பசி; 19—10—51. தளிர்—3

குருகுலத்தின் குறிக்கோள் :

பொதுமறை விளக்கம்—திருவள்ளுவர் தெரிவிப்பது

கல்வியின் பயன்

வாழ்க்கை, 'பொருள் வாழ்வு' 'கலை வாழ்வு' 'அருள்வாழ்வு' என்று மூன்று வகையான படிமுறைகளில் நடந்து வருகிறது. இவற்றை ஆசிரியர் முறையே 'பொருட்பால்' 'இன்பப் பால்' 'அறத்துப்பால்' என்று வாழ்க்கை வேதமாகிய தமது திருக்குறளில் வகைப்படுத்தினர்.

படிப்பு ஆட்சி சொத்து முதலிய பொருள் நலங்களின் அமைவு, 'பொருள் வாழ்'வாகும். அவற்றின் அழகியல்புகளான இலக்கியம் ஓவியம் சிற்பம் காதல் முதலிய நுண்ணறிவு நயங்களின் நுகர்வு, கலை வாழ்'வாகும். அன்பு ஒழுக்கம் ஒப்புரவு நோன்பு முதலிய மெய்யுணர்வு நேர்மைகளின் பேறு, 'அருள் வாழ்'வாகும்.

பொருட் கல்வியும் நுண்கலையும் பொதுவாகக் கல்விப் பயிற்சி எனப்படும். அதனைப் பெற்றோர், பொருள வாழ்வும் கலை வாழ்வுமே பெற முடியும்; அவற்றால், அறிவும் இன்பமுமே அடைய முடியும்.

வாழ்க்கையின் நோக்கம் இன்னும் வேறே உள்ளது, அது 'தெளிவு' அடைதல். அருள் வாழ்வு பெறுவதனால், மக்கள் தெளிவை அடைய முடியும்.

உயிரினங்களுக்குத் 'தெளிவு' என்னும் இந்த முடிந்த வாழ்க்கைப் பேற்றை உண்டாக்கவே, உலகத் தலைவராகிய கடவுள் முயன்று வருகின்றார். அவருடைய அருள் முயற்சிகளில் ஈடுபடுதல், பொருட் கல்வியும் நுண்கலையும் கற்றதனால் ஆகிய பயன்! அங்ஙனம் ஈடுபடும் நன்மக்களுக்கு அப் பணியின் வாயிலாகத் தெளிவு நலம் உண்டாதல் திண்ணம்.

தெளிவில்லாத அறிவும் இன்பமும் கலக்கமானவை. ஆகவே, அருள் நலமில்லாத பொருள் வாழ்வும் கலைவாழ்வும் பயனற்றவை; வீண் முயற்சிகள்.

கற்றதனால் ஆய பயன்
என்கொல், வால் அறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்?

வால் அறிவன்—தூய அறிவினையுடைய கடவுளின், நல் தாள்—உயர்ந்த திருவடிகளை, தொழாஅர் எனின் — வணங்க மாட்டாரென்றால், கற்றதனால்—கற்றும் கேட்டும் மக்கள் பொருட்கல்வியும் நுண்கலைகளும் பயின்றதனால், ஆய பயன்—உண்டான பயன், என்கொல்—என்னவோ? ஒன்றுமில்லை.

கற்றல் என்பது கேள்வியையும் உள்ளடக்கி நின்றது. வாழ்க்கை நோக்கம் கலைகள் பயில்வதோடு நின்றுவிட வில்லை. அதனால் ஆன பயன் வேறே பெறவேண்டியிருக்கிறது. 'ஆய பயன்' என்றதனால் இது தெரிகின்றது. அப் பயனாவது, கடவுளைத் தொழுதல்.

வால்—தூய்மை; அறிவு என்றது, இங்கே உணர்வு; வால் அறிவு—மெய்யுணர்வு. நல்—உயர்ந்த; தாள்—முயற்சி; அதாவது, பிறர் நலத்துக்காக உழைக்கும் தூய அருளாற்றல். இந்த அருளியல்பைத் 'திருவடி' என்று சொல்வது பெரியோர் வழக்கு. தொழுதலாவது அதனில் ஈடுபடுதல்; அதாவது, இறைபணிநிற்றல்.

"முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

4-ம் ஆண்டுக் கையொப்பம்
(5-10-51 முதல்)

உள் நாடு	ரூ.	4	0	0
வெளி நாடு	ரூ.	6	0	0
தனித் தாள்		0	1	0

விற்பனை யாளர்கள், தேவைக்கு முன்பணத்துடன் எழுதுக

முகவரி :—

குருகுலம், மாம்பாக்கம்,
மதுராந்தகம் **P. O.**
(தென் இந்தியா)

"யாதும் ஊரே, யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா."

—புறநானூறு.

கிளை	கர, ஐப்பசி,	தளிர்
4	19-10-51 வெள்ளி	3

இந்தியப் பணம்

இந்தியா, உலக நாடுகளில் மிகவும் ஏழை நாடு. ஆனால், மக்கள் மிகுந்த நாடு.

மக்கள் மிகுந்த நாடுகள், கருத்தில்லாமலிருந்தால் மேன்மேலும் வறிய நாடுகளாகும். கருத்தோடிருந்தால், மேன்மேலும் வள நாடுகளும் ஆகலாம்.

ஐரோப்பா முதலிய மேல் நாடுகளும் அமெரிக்கா முதலிய கீழ் நாடுகளும் புதிய புதிய கருவிகளைக் கைத்தொழில் வாயிலாகக் கண்டு வெளிநாட்டு வாணிபத்தால் செல்வம் பெருக்கிவருகின்றன.

இந்தியா, வழங்கத் தெரிந்ததேயன்றி வாங்கத் தெரிந்ததன்று; அதிலும், தமிழகம் அடியோடு அம் முறைகள் அறியாதது; அங்ஙனம் அறியவேண்டிய எளிமையிலும் இல்லாதது.

தொழில்களில் நாணயமான நல்ல தொழில் உழவுதான் என்பது எல்லாரும் அறிந்தது; பெரியவர்களும் ஒப்புக்கொண்டது. இந்தியா அச் சிறப்பினை நன்கு பெற்றுள்ளது.

உழவாற் பெறக்கூடிய உணவு உடை நிழல் என்னும் அடிப்படைத் தேவைகட்கும்; அறிவு, கலை, அருள் என்னும் மேல் நிலைத் தேவைகட்கும் அயல் நாடுகளை எதிர்பார்க்கவேண்டிய கட்டாயம் அதற்கு இல்லை.

அப்படி இருக்கும்போது, மக்கள் மிகுந்த இந்தியா ஏழையாய் இருப்பானேன்? ஒன்று, இந்தியப் பணம் வெளி நாடுகளுக்குச் செல்லவேண்டும்; அல்லது, மக்கள் உழைப்பில்லாதவர்களாய் இருக்கவேண்டும்; அல்லது, செல்வம் பயனற்ற வீண் துறைகளிற் செலவாதல் வேண்டும்.

உண்மையில் இம் மூன்று வகையாலும் இந்தியச் செல்வம் சீரழிகின்றதென்றே சொல்ல வேண்டும்.

கருவிகளைக் குறைத்து மக்கள் உழைப்பால் தொழில்களைச் செய்யவேண்டும்; கட்டாயமான கருவிகளை இந்தியர் தாமே உண்டுபண்ணிக் கொள்ளவேண்டும். புதியவாகக் கண்டுபிடிக்கும் பொருள்களை மட்டும் வெளிநாடுகள் விரும்பும் வரையில் அவற்றின் நலங் கருதி அவற்றிற்கு அனுப்பிவரலாம்.

கருத்தின்மையாலும் உழைப்பின்மையாலும் ஏமாற்றமும் வறுமையும் நம்மவர் மேன்மேலும் பெற்றுவருதலை உடனே தவிர்க்கவேண்டும்.

நேர்மையும், நீதியும் இல்லாத காவு வாழ்வுகளால் பணம் தீமைத் துறைகளில் எவ்வளவோ செலவாகின்றது; இதனால் மக்கள் ஆற்றல் குறைந்து தக்கபடி தொழில் செய்ய மாட்டாதவராகிப் பொருள் நலம் இழக்கின்றனர்.

தக்கோர் இவ்வகைகளிற் கருத்திருத்தித் திருத்தி இந்தியச் செல்வத்தைச் செழுமை செய்தல் நல்லது.

"செய்க பொருளைச் செறுநர்
செருக்கறுக்கும்
எஃகதனிற் கூரியது இல்."

குருகுல மாநாடு

ஆய்வுரைக் கூட்ட

அழைப்பிதழ்

அன்புடையீர்!

நமது மாம்பாக்கம் குருகுலத்தின் தொண்டு பற்றியும், அதன் கொள்கைகளையும் பணித்திட்டங்களையும் பொதுமக்களிற் பலரும் அறிந்து ஈடுபட்டுச் சிறப்பதற்கு வாய்ப்பளிக்கிற முறையில் வருகிற கார்த்திகைத் திருநாளின் போது குருகுல மாநாடொன்றை நடத்துவது பற்றியும் ஆராய்ந்து தக்க முறைகள் செய்ய, (21–10–51) ஞாயிறன்று காலை 8-மணிக்கு ஓர் ஆய்வுரைக் கூட்டம் சென்னைச் சிவனடியார் திருக்கூட்ட மண்டபத்தில் ஆசிரியர் அவர்களின் முன்னிலையில் நடைபெறும். தாங்கள் அன்பு கூர்ந்து வந்திருந்து தக்க கருத்துக்களைச் சொல்லி உதவி செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகின்றோம்.

குருகுலச் செய்தியாளர்.

* * இளங்கோவடிகள் * *

(முத்துசாமி)

சிலப்பதிகாரம் என்னும் முத்தமிழ்க் காப்பியத்தை இயற்றியவர் இளங்கோவடிகள். இவர் சேர நாட்டு அரசனான செங்குட்டுவன் தம்பி. இவர் தந்தையார் பெயர் சேரலாதன் என்பதாம்.

ஒரு நாள் சேர நாட்டின் தலைநகராகிய வஞ்சியில் தந்தையாருடன் இவர் இருக்கும்போது, நிமித்திகன் ஒருவன் அரச பதவிக்கு வரும் இலக்கணம் இவருக்கு இருக்கிறது என்று கூறினன். இவருக்கு மூத்தோனாகிய செங்குட்டுவன் இருக்க இவ்வாறு முறைமையில்லாததைச் சொன்னான் என்று அவன் மீது வெகுண்டு, செங்குட்டுவனுக்குத் துன்பமுண்டாகாதபடி துறவு கோலம் பூண்டனர். இவ்வரலாற்றினை இளங்கோவடிகளே பின்னர் வரந்தரு காதையில் கூறுகின்றனர்.

இங்ஙனம் இவர் செல்வத்திலும் போகத்திலும் பற்றுவிட்ட சான்றோராய் விளங்கினமையை இந்நிகழ்ச்சியால் அறியலாம்.

இவருடைய காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டென அறிஞர்கள் ஆராய்ந்து முடிவு கட்டியிருக்கின்றனர். ஆகவே செங்குட்டுவன் வடநாடு படையெடுத்து மீண்டதும் இக்காலம் என்று தெரிகிறது.

இவருடைய சமயம் சைவம் என்று சிலரும் சமண் சமயம் என்று சிலரும் கூறுகின்றனர். இவர் சமயம் எதுவாயினும் நூலில் நடுவு நிலைமை பிறழாது அவ்வச் சமயத்தைப்பற்றிய குறிப்புக்கள் கொடுக்க வேண்டிய இடத்தில் கூறியிருப்பது, தன் சமயத்தைப் போற்றியும் பிற சமயத்தைத் தூற்றியும் பேசும் தாழ்ந்த பண்பு இவரிடம் இல்லையென்பது தெரிகின்றது.

மேலும் தாம் சேரநாட்டைச் சேர்ந்தவராயினும் தாம் பூண்ட துறவு கோலத்துக்கு ஏற்ப எல்லாம் தம் ஊராகக் கருதும் பரந்த உள்ளம் கொண்டவராய் மூவேந்தர் நாட்டைப் பற்றியும் நடுவு நிலைமை சிறிதும் பிறழாது கூறியிருக்கின்றனர்.

இந்நூலின் இறுதியில் உலக மக்களை விளித்துச் சில அறவுரைகள் கூறி முடிக்கின்றனர். இவ்வளவு பெரிய காப்பியத்தைக் கற்றும் சில அறங்களையேனும் மேற்கொள்ளா தொழியின் படித்ததனைத்தும் வீணாமானமையின் "தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்!" என விளித்து, "பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்" என்பது முதலாய், "செல்லும் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின்" என்பது ஈறாகச் சில அறவுரை கூறி "மல்லல் மா ஞாலத்து வாழ்வீரீங்கு......" என்று வாழ்த்தி முடித்திருப்பது கொண்டு இந்நூலை இவர் எழுதியதே இவ்வறவுரையை மக்களுக்கு எடுத்துக் கூறத்தான் என்று தெரிகிறது. அன்றி எவ்வித அறத்தினையும் உணர்த்தாதராய், காம எண்ணத்தை மட்டும் கிளப்பிப் பொருள் வருவாய் ஒன்றே மட்டும் குறிக்கோளாகக் கொண்டு இக்காலத்து எழுதப்படும் நவீனங்கள் போன்றோ சிறந்த சான்றோராகிய இளங்கோவடிகள் எழுதுவர்?

நூலிறுதியில் அறவுரையில் முடித்திருப்பது படிப்பவர் மனத்தை அறவுரையில் நிலைநிறுத்தி அற ஒழுக்கமின்றி வெறும் நூற்படிப்பால் பயனில்லையென்னும் எண்ணத்தை உண்டாக்குவதனை ஓர்க.

இந்நூலுக்குப் பண்டை உரையாசிரியர்கள் இருவர். ஒருவர் அரும்பத உரைகாரர். இவர் பெயர் தெரிந்திலது. மற்றொருவர் அடியார்க்கு நல்லார். இவ்விருவருள் அரும்பத உரைகாரர் முந்தியவர். அடியார்க்கு நல்லார் உரை நூல் முழுவதற்கும் கிடைத்திலது.

அண்மையில் விளங்கிய திரு. வேங்கடசாமி நாட்டாரவர்கள் நூல் முழுமைக்கும் ஒரு விளக்க உரை எழுதி உதவியிருக்கின்றனர்.

இங்ஙனம் மூன்று உரைகள் இருந்தும் எவ்வெக் கதைகளையோ படித்துக் காலத்தை வீணே கழிக்கின்றனரேயன்றித் தமிழ் நாட்டுக் கற்பரசியின் வரலாற்றினைக் கூறுவதாகிய இக் காப்பியத்தைக் கற்பார் மிகச் சிலரே.

சிலர் சிலப்பதிகாரம் என்று தமிழில் ஒரு நூல் இருக்கிறது என்றே அண்மையில் நடந்த இரண்டு சிலப்பதிகார மாநாட்டிற்குப் பின்னர்த் தான் அறிந்தனர் எனின் தமிழர்க்குத் தம் நூலில் உள்ள ஆர்வம் எவ்வளவு என்று எண்ணிப் பாருங்கள். ஷேக்ஸ்பியர் படிக்கின்றனர்; மில்டன் படிக்கின்றனர்; பைபிள் படிக்கின்றனர். அவற்றில் புலமை மிக்கவர் என்று பெருமை கொள்கின்றனர். மக்களும் அவருக்கு மதிப்பும் செல்வாக்கும் தருகின்றனர். மேற்கூறிய நூல்களை விட எவ்வளவோ சிறந்தவையான திருக்

(தொடர்ச்சி 7-ம் பக்கம்)

பெரிய புராணம்

அப்பொழுது திருவைந்தெழுத்தின் ஒலிகள் வான்வெளியில் நிறைந்தன; விண்ணவர் பொழிந்த மலர் மழை மண்ணுலகில் நிறைந்து பெருகிற்று; உலகமக்கள் மகிழ்ச்சி பொங்கினர்; மறைகள் முழங்கி ஒலித்தன. இத்தகைய கிளர்ச்சிகள் நற் குறிகளிடையே, நம்பியாரூரரை ஓலை காட்டி ஆண்ட இறையவர் பின் வருமாறு அருளிச் செய்தார்:

“மற்று நீ வன்மை பேசி
'வன்றொண்டன்' என்னும்
நாமம் பெற்றனை; நமக்கும்
அன்பிற்
பெருகிய சிறப்பின் மிக்க
அற்சனை பாட்டே ஆகும்;
ஆதலால், மண்மேல்
நம்மைச் சொற்றமிழ்
பாடுக' என்றார்,
தூமறை பாடும் வாயார்.”

'நீ எம்முடன் பேசும்போது, எம்மைப் 'பித்தன்' என்றும், 'இவன் பழைய மன்றாடி போலும்' என்றும் வன்சொற்கள் சொல்லி ஏசினாய்; ஆதலால் இன்று முதல் நீ 'வன்றொண்டன்' என்னும் பெயரைப் பெற்றனை. நமக்குச் சிறப்பு மிக்க வழிபாடென்பது அன்பில் எழும் பாட்டுத்தான். ஆதலால், இவ்வுலகில் நம்மைச் சொல் நலம் அமைந்த தமிழாற் பாடுக' என்று அருளிச் செய்தார், எழுதாக் கிளவியாய்த் தூய மந்திர ஒலிகளை இசைக்கும் உண்மையோராகிய கடவுள்!

பொருளறிவுக்கும் கலையறிவுக்கும் தெளியப் பெறாத திருவைந்தெழுத்தின் உள்ளுறைப் பொருளாயுள்ள இறைவன் இங்ஙனம், 'பாடுவாய் நம்மை' என்று அருளிச் செய்ய நம்பியாரூரர் அதன் வழி நிற்குங் கருத்துடையவராய்த் திருவடிகளை வணங்கி நின்று, 'வேதிய வடிவில் எழுந்தருளி அடியேனை வழக்கினால் வெல்ல வந்த நன்மையை அறிந்து கொள்ள முடியாதிருந்த எளியேற்கு எப்படியோ நல்லுணர்வு, தந்து தடுத்தாட்கொண்ட கோதிலா அமுதமே! இப்போது, கடல்போன்ற நினது குணப் பெருமையை எக் கருத்து அறிந்துச் சொற்கள் அமைத்து அடியேன் பாடக்கூடும்?' என்று கேட்டுக்கொண்டார்.

மாதர் உள்ளம்

(சி. து. க.)

மாதருடைய இயற்கையறிவு ஆடவர் அறிவினின்று பெரும்பாலும் வேறாகக் காணப்படுகிறது. துன்ப நிகழ்ச்சிகளைச் சகிப்பதிலும் அவ்வாறே. தம்மாற் காதலிக்கப் பெறும் ஆடவர் பொருட்டுத் தமக்கு நேரும் துன்பங்களைச் சகிப்பதில் அவர் வன்மை இன்னும் அதிகமாகக் காணப்படுகிறது. ஒரு நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. ஒரு சமயம் இலண்டன் மாநகரில் 'காமன்ஸ்' பேரவையில் டிஸ்ரேலி ஒரு முதன்மையான கருத்துப்பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தச் செல்ல நேர்ந்தது. அவ்விரிவுரை கேட்க அவருடைய மனைவியாரும் அவருடன் செல்லலானார். அவைக்குச் செல்லக் காத்திருக்கும் வண்டியில் முதலில் ஏறிய மனைவியார் கதவின் பக்கத்திலேயே அமர்ந்து விட்டார். முதலில் ஏறுபவர்க்குரிய விதிப்படியே அவர் ஏறி அமர்ந்தார். சிறிது நேரத்தில் கணவனாரும் ஏறி, தம் மனைவியைத் தாண்டிச் சென்று அவர் பக்கத்தில் அமர்ந்தார். வெளியிலிருந்த வேலையாள் வண்டியின் கதவை இழுத்து மூடினான். மனைவியாருடைய கட்டை விரல் கதவிடுக்கில் அகப்பட்டுக் கொண்டது.

பொறுத்தற்கரிய வலி! ஆனால் வாய்விட்டரற்ற அவர் விரும்பவில்லை. அரற்றினால், தம் கணவருடைய அமைதியுள்ளம் நிலைகுலையும்; கலக்கமெய்தும்; அதனால் அவர் நிகழ்த்தவிருக்கும் விரிவுரைக்குப் பழுது நேரும் என்று அவர் உணர்ந்தார். ஆகவே அங்கிருந்து 'காமன்ஸ்' பேரவை செல்லுந்துணையும் தம் கட்டை விரலைக் கதவிடுக்கினின்று எடுக்க முயலாமலும், தம் நோயை வெளியிற் புலப்படுத்தாமலும், தம் கணவனாருடன் மகிழ்ச்சி கலந்த இனிய குரலிற் பேசிக்கொண்டே சென்றனர்.

மகளிர், காதல் பொருட்டுத் தம் உள்ளச் சான்றையும் மீறி நடக்கப் பின் வாங்குவதில்லை. தன் காதலன் கொலைக்குற்றம் செய்தவன் என்று அறமன்றத்தில் நிறுத்தி விசாரணை செய்யப்பட்டால், அவன் செய்த குற்றத்தை நேரிலேயே கண்டவளானாலும், தன் அன்பன் குற்றமற்றவன் என்று சொல்லப் பெரும்பாலும் பெண்களில் எவளும் தயங்கமாட்டாள். அப்படி சொல்வதில் ஒருவகை அமைதியும் அடைவாள், காதல் அவள் உள்ளத்தில் முதலிடம் பெறுகின்றது.

—Commander A.B. Campbell
R. D.
(Come alongside)

* தனித் தமிழ் வீரர் *

நினைவு நாள்

சென்னையில் அறிஞர்கள் முழக்கம்!
புலவர் பிரானைப் பின்பற்றும் கிளர்ச்சி!

மறைமலையடிகள் முதலாண்டு நினைவுநாள் 29.9-51 சனி மாலை சென்னை முத்தியாலுப் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் கொண்டாடப் பெற்றது. அவ் விழாவிற்கு டாக்டர் திரு. இராசமாணிக்கம் பிள்ளை தலைமை தாங்கினர்.

அவர் தலைமை யுரையில், 'நம் அடிகள் 20-ம் நூற்றாண்டு அறிஞர்; நூல் பல கற்று அவற்றின் முடிபுகளை நன்கறிந்தவர். அவர் தமிழ்த்தொண்டு அளவிலடங்கா. அன்னார் பெருமை அறியாத் தமிழகத்தில் இன்று அவருக்கு நினைவு நாள்! அவரிடம் நெருங்கிப் பழகாதவர்களும், அவர் யாத்த நூல்களை நன்றாகக் கற்கலாகாதாரும், கல்லாதாரும் அவரைப்பற்றி மாறுபடக் கூறுவர். அவர் மொழி வேற்றுமை கருதாதவர்; மக்கள் ஒன்றுபட்டு வாழ்தலில் கருத்து வைத்துச் செயலாற்றியவர். அவர் எழுதிய நடை ஒருவராலும் எழுதலாகாத ஈடும் எடுப்புமற்ற சீரிய செந்தமிழ் நடை. மும்மொழி யறிவு நிரம்பப் பெற்றவர்; பன்மொழிப் புலவர். தனித்த துறவு நெறி மேற்கொண்டவர். பேசவும் எழுதவும் வன்மை வாய்ந்தவர். அவர் நூலாராய்ச்சித்திறன் ஒரு தனிச் சிறப்புடையது' எனக் கூறி முடித்தார்.

அடுத்து, புலவர்மணி பாரிப்பாக்கம் கண்ணப்ப முதலியார் பேசினர். அடிகள், உலகத்தை விளக்க வந்த செஞ்ஞாயிறு, என்றும், அவர் செய்த தொண்டால் செந்தமிழ் நாடும் சைவ உலகும் வாழும்வகை பெற்றன என்றும் கூறினர். அவர் சொல் செவிக்கினிமை தருவதன்றி வாய்க்கும் மனத்திற்கும் இனிமை பயப்பதாயிருந்தது. ஆராய்ச்சி யறிவு இன்னதென்று அறியா நாளில், பல ஆராய்ச்சி நூல்களை வாரி வீசினர். இன்று தமிழரிடையே ஒலிக்கும் கூக்குரல் அவர் அளித்த பிச்சை. இதனை 40 ஆண்டுகட்கு முன் தமிழ் வாழ்ந்த நிலையையும் இன்றுள்ள நிலையையும் ஒப்பிடுவோர்க்குத் தெற்றென விளங்கும். இன்றும் தமிழ் மொழி உயர்ந்து விடவில்லை; தமிழரிடை மொழிப்பற்றின்மையும் தாய் மொழியை ஊன்றிக் கல்லாத குறையுமே, போற்றுதலற்ற இந்த இழி நிலைக்குக் காரணமாகும்.

சைவ உலகுய்ய 40 ஆண்டுகட்கு முன்பு அடிகளார் சைவ சித்தாந்த சமாஜத்தைத் தோற்றுவித்து மாநாடு கூட்டும் முறையையும், வரவேற்பளிக்கும் வகையையும் 4 ஆண்டுகள் தக்க அறநெறிச் சான்றோர்களைக் கொண்டு தொடர்ந்து நடத்திக் காட்டினர். "ஞானசாகரம்" என்னும் பத்திரிகை நடத்தி வந்தார். சைவ சித்தாந்த தத்துவம் ஒரு வாழ்வியல் மதம் என்னும் அளவிற்கு மேனாட்டவரும், வடநாட்டவரும் வியந்து பாராட்டும் வகையில் சைவம் பரவ ஆங்கில நூல்களை யாத்தார்; அவரது நடைவளம் நாவலர் நடைவளத்திற்கே ஒப்புடைத்தாய்த் திகழ்ந்தது. தொல்காப்பிய முதன்மையையும், அது முழு முதல் நூல், இடைச் செருகல்களில்லை என்பதையும் நிலை நிறுத்தியவர் அடிகளே. காய்தல் உவத்தல், மதபேதம், நடுநிலையற்ற தன்மை இவையெல்லாம் அடிகளிடம் காண முடியாது. தன்னம்பிக்கையில் தளரா உறுதியும், அறிவு முயற்சியின் நிறைவும், சாத்திரத் தெளிவும், எத்தகைய கண்டனத்திற்கும் அஞ்சாது உண்மையுரைக்கும் பான்மையும் தனிச் சிறப்புடையன. சங்க நூற்

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)

நஞ்சன்கூடு பல்பொடி.

பாக்டெரியாரின்

யுனைடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, :: சென்னை-1.

(5-ம் பக்கம் தொடர்ச்சி)

பிழிவுகள் அவரளித்த நூல்கள். அவற்றை எங்கும் பரவச் செய்தலும், கலாசாலைகளில் அவர் திருவுருவப்படம் வைத்தலும், சதுக்கங்களில் சிலை யமைத்தலும் அவர் நினைவு குறித்து எழும் செய்கை என்று தம் விழைவைத் தெரிவித்துக் கொண்டார்.

பேராசிரியர் ரா. பி. சேதுப் பிள்ளையவர்கள், 'விழாவிற் கலந்து கொள்ள உடல் நலம் பெற்றிலேம். வித்தகம் பேச வேண்டாம், பணி செய்ய வேண்டும். நற்றமிழ் வாழ்க; மறைமலை வாழ்க', என்று செய்தி யனுப்பி வைத்தார்.

'அடிகளாரிடத்துத் தமிழகம் தன் கடமை தவறியது' என்றார், திரு. ஆலாலசுந்தரஞ் செட்டியார். 'அடிகள் எழுதிய நூலை அவரே அச்சுக் கோத்துப் பதிப்பிக்கும் நிலைக்குத் தமிழ் நாடு விட்டு வைத்தது. அறிஞர்களைத் தனிப் பொருள்களாகக் கருதாமல் தமிழ் நாட்டுப் பொதுப் பொருள்களாக மதித்துப் போற்றுதல் வேண்டும் என்று கூறினர். காட்டாகத் தமிழின் தவப்புதல்வர் திரு. வி. க. அவர்கள், நூல்களை நுணுகிப் பார்த்துப் பார்த்துத் தம் கண்ணொளி யிழந்தார். தக்க அறிஞரைப் போற்றுதல் மக்கள் கடமை யென்பதை மறந்து, அரசியலார் மீது பழி சுமத்துவது வீண். அடிகளைத் தமிழ் அத்தான முதற்புலவராகப் பெறும் தகுதியை இழந்தது ஒரு பெருங் குறை; சான்றோர்க்கு நடுகல் இட்டு வணங்குதல் தமிழர் பண்பாடு. நம் அடிகட்கும் அவ்வாறு செய்து பெருமை குன்றாது காத்தல் கடமை. தமிழர்க்கு முற் போக்கு எண்ணம் சிறிதும் இல்லை. வலுப் பெற்ற தமிழரது எழுச்சி, எதுவும் செய்ய வல்லது' என்று கூறினர்.

'அடிகள் புலமைக்குச் சான்று அவர் தம் நூல்களே' என்றார் பாலூர் கண்ணப்ப முதலியார். அடிகளுடைய ஆங்கிலப் புலமை பட்டதாரிகளை விஞ்சும் வண்ணம் இருந்தது. அவர்தம் ஆராய்ச்சி நூல்கள் மேனாட்டு முறையில் உள்ளன. சங்க இலக்கியத்தைப் பதிப்பித்தவர் ஐயர் என்றாலும், அவற்றின் மதிப்பை மக்களறிந்து கொள்ள அடிகள் பெரிதும் பணி ஆற்றியுள்ளார். அவருடைய சொல்லாராய்ச்சி விழுமியது. அடிகள் ஒருவரே உரையாசிரியராயும், ஆராய்ச்சி யாளராயும், கவிஞராயும் திகழ்ந்தார். தவக்குறைவால் தமிழ் நாட்டில் அவர் தவறிப் பிறந்து விட்டார். போற்றுதல் பெற்றிலர். ஆராய்ச்சி யறிவு பெற விரும்பு மொருவன் அடிகள் ஆராய்ச்சி நூல்களைப் படித்தல் சாலும்' என்றார்.

'மிக வறியனாயினும் விவிலிய (பைபிள்) நூலைத் தன் வைப்பாகக் கொண்டுள்ளான் கிறித்தவன். தமிழன் எதைக் கொண்டுள்ளான்?' என்று ஆரம்பித்தார் திரு. தாமரைக்கண்ணி யம்மையார். 'அடிகள் பெயரில் நினைவுச் சின்னமாக அவருறைந்த பல்லாவரத்திலேயே ஒரு மன்றம் எழ வேண்டுமென்றும் அது அவ்வழிச் செல்வோர் கருத்தை யீர்க்கும் வகையில் திகழ வேண்டு மென்றும் தம் விருப்பத்தையும் அதற்குத் தம்மாலியன்ற உதவியைச் செய்வதையும் தெரிவித்தார்.

'தமிழிலக்கியம், தமிழ் மொழி, அடிகளால் சிறப்பெய்தின. ஆகலின் பெருமைக்குரிய தமிழின் தாயகம் அவர்'. என்றார் திரு. நாரண துரைக்கண்ணன். 'அடிகள் பேச்சால் திருந்தியவர், அவரெழுத்தால் திருந்தியவர் பலப்பலர். ...ற்கால அரசு தமிழர்களா..., தமிழார்வமுள்ளவர்களா... நடத்தப் பெறவில்லை. ஆகவால் அடிகள் முதல் அத்தான கவியாக வருதல் பொருந்தாது. அப்படி வந்திருப்பராயினும் பெருமை குன்றியிருக்கும். பொருளற்ற சாதிமதச் சழக்குகளைக் கழற்ற அடிகள் மிகவும் பாடுபட்டார். தமிழ்த் திருமணத்தை முதலில் நடைமுறையில் காட்டிப் புகுத்தியவர் அவர். அடிகள் பொருள் பற்றுடையரல்லர். சான்றாகக் கும்ப

PHONE 55034 TEL. ENKAYAM
கைத்தறி ஆடைகளில் சிறந்தது எங்கள் கிசான் டிரேட்மார்க்

பட்டாடைகளுக்கும் நூலாடைகளுக்கும் சிறந்த இடம்
கருப்பண முதலியார் ஸ்டோர்ஸ்
53, கிடங்குதெரு சென்னை 1.

கோணம் சின்னபட்டம் மறுத்தமையும், யாழ்ப்பாணத்துக் கல்லூரித் தலைமைப் பதவி எற்கவொவாது போனமையும் இதனை வலியுறுத்தும்.

'இந்தியர் பண்பாட்டை மேனாட்டிற்கு விவேகானந்தர் பறை சாற்றியதே போல் அடிகள் சைவ சித்தாந்த நுண்பொருள்களை ஆடம்பர வயப்பட்ட மக்கட்கு உணர்த்தி அறிவுத்திறம் வளர மிகப் பாடுபட்டார். விவேகானந்தரைப் போன்ற துறவு நிலை பூண்டவர். 'ஒழுங்கான வாழ்க்கை மக்கள் மனத்தில் நன்றாகப் பதிந்து நிலையான பெரும்பயன் தரும்' என்னும் நுட்பம் அறிந்து ஒழுகியவர். அவர் யாத்த சாகுந்தல நாடகமும் அந் நாடக ஆராய்ச்சி நூலும் முதல் நூலை விடச் சிறப்புடையவை என்று அடிகளிடம் மாறுபட்ட கருத்துடையவர்களும் பாராட்டும்படி திகழ்ந்தனர்' என்றார்.

'தொண்டுதான் மக்களைத் தூயாராக்கி நன்னிலைக்கு உயர்த்தும். பணியற்ற ஆர்வம் மனைவியில்லா ஒருவன் மகன் வேண்டுவது போலாகும். அடிகளிடம் பொதுவுடைமை யிருந்தது' என்று திருவள்ளுவரகம் இராமநாத பிள்ளை கூறினார்.

செந்தமிழ்ப் புலவர் வேணுகோபால் பிள்ளை 'தமிழர் ஆடம்பர மயக்கால் போலியைப் போற்றும் பழக்கம் கொண்டுள்ளனர்; அறிஞரைப் பாராட்டும் தகைமை புல் முளைத்துப் போய் விட்டது. கள்ள முள்ள நகைத்த பேச்சு அடிகளிடம் இல்லை. அறிஞன் ஒருவன் தனித்த நிலையில் பெருமை குன்றாமல் வாழ்க்கை நடத்த முடியும் என்று இறுதிவரை கம்பீரமாக வாழ்ந்து காட்டியவர்.

'இளங்கோவடிகள், சாத்தனார் முதலிய புலவர்கள் நகை முகத்தால் இரந்து வயிறு வளர்த்திலர். அடிகள் நடை, உடை, உணவு முறை, உரையாடுதல் எல்லாம் தனிச் சிறப்புடையன. தன் மதிப்பைத் தானுணர்ந்து பிறழாது வாழ்க்கை நடத்தியவர்.

"எண்ணிய எண்ணியாங்
கெய்துவர் எண்ணியர்
திண்ணியராகப் பெறின்."

என்னும் மறை மொழிக்கிலக்காக அடிகள் விளங்கியவர்.

'தமிழ் மொழி இனிமையுடையது; அதன் இனிமை புலப்படப் பேசுதற்குத் தம் சொந்த ஒலியையும் குயில் மிழற்றுவது போல் மாற்றியமைத்துக் கொண்டவர் அடிகள்.

'பாராட்டுஞ் செய்கை, தூற்றுதல் ஒழித்துப் போற்றுதல் கொள்ளும் பண்பு வளர்த்தற்கேயாம். குற்ற மிருப்பினும் அதனை மறந்து குணங் கூறுதல் தூய்மையை வளர்க்கும். ஒரு சில தமிழராகிலும், தம் நூலைத் தாமே பதிப்பிடுதல், தனித்த வாழ்க்கை நடத்துதல், நடு நிலைமை வகித்தல், வேறுபாடு கருதாமை முதலிய அடிகளின் பண்பாட்டைப் பின் பற்றுதல் வேண்டும்' என்றார்.

'அடிகள், கல்வி, அறிவு, ஆராய்ச்சி யென்னும் முக்கண் படைத்த தமிழர்' என்று திரு. மாணிக்க முதலியார் குறிப்பிட்டார்.

'அடிகளார் புகழ் வளருந்தகையது' என்று ஆடலரசு கூறினர்.

அடிகளைச் சரிவரப் புரிந்து கொள்ளும் நிலை வெகு தூரத்திலில்லை யென்றும், அடிகள் நூல்களனைத்தும் தன் மதிப்புச் சுவடிகள் என்றும், ஒவ்வொருவருள்ளத்திலும், ஆத்திகராயினும் தன் மதிப்புக் கருத்துகள் மறைந்துள்ளன என்றும் தங் கருத்து நன்கு தோன்றத் திரு. இளஞ்செழியர் பேசக் கூட்டம் முடிந்தது.

அடிகளார் துவக்கிய தனி (தமிழ்) மொழி இயக்கத்தால், தெலுங்கு, துளுவம், கன்னடம், மலையாளம் முதலிய மொழியினருள்ளும் அவ்வியக்கம் அரும்பியுள்ளதென்று ஓர் அன்பர் கூறினர்.

அடிகளார் கருத்தைப் பின்பற்றிப் பொது நிலைக் கழகத்தைப் புதுக்க ஒரு தீர்மானம் நிறைவேறியது. —சச்சிதானந்தம்.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

குறள் கற்பதில்லை; சிலப்பதிகாரம் கற்பதில்லை; மெய்கண்ட சாத்திர நூல்கள் கற்பதில்லை. ஒரு சிலர் கற்றுச் சிறந்த புலமை பெற்றிருப்பினும் அவர்களை மதிப்பதில்லை; செல்வாக்கும் கொடுப்பதில்லை. இவர்கள் வறுமையால் வாடி வதங்கி மடிகின்ற நிலையிலிருப்பர். தமிழ் மக்கள் இவ்வளவு சீர் கேடான நிலையிலிருந்தால் சிலப்பதிகாரம் போன்ற சிறந்த தமிழ் நூல் எழுந்த, தண் தமிழ் நாட்டின் ஒரு பகுதியான சேர நாடு என் மலையாள நாடாகாது? இன்று அந்நாட்டைச் சேர நாடு என்றால் யார்க்கும் தெரியாது. ஆனால் அப்பெயரின் குறிப்பாகிய கேரளம் என்றால் தெரிந்து கொள்வர்.

போனவை போக இனியாயினும் விழிப்பின்மையோடு இருந்தால் நாட்டின் எல்லை இன்னும் சுருங்கிப்போக எதுவாகும் என்பதனை ஒவ்வொரு தமிழனும் உணரவேண்டும்.

-- திருக்கோயிலார்க்கு --

சென்னை மல்லீசுரர் கோயில் அறங்காவலர் திறம்

(ஆடலரசு)

திருக்கோயில்கள, வாழ்வில் பெறவேண்டிய அகப்புற நலங்களைப் பெறாமல் பலவகையிலும் தளர்ச்சியுறும் மக்களுக்குக் கூடிய மட்டும் உதவி செய்து, ஊக்கமூட்டுவதற்காகவே சான்றோர்களால் ஏற்படுத்தப்பட்டன.

புறநலங்களைவிட அக நலங்களிலேயே மிகுதியாகக் கருத்திருத்துமாறு மக்களை அவை செலுத்தும். ஆயினும், காணார், கேளார், கால் முடப்பட்டார் போன்ற மாட்டாத மக்களுக்கும் புற நலங்களை இயன்ற அளவு தேடிக் கொடுத்து, மற்றப்படி, மக்களை எல்லாரும் உடல் நலத்தோடு வாழ மருத்துவ உதவிகளும் அறிவு நலத்தோடு திகழக் கல்வி வசதிகளும் பழைய காலத்தில் நம் நாட்டுக் கோயில்கள் கொடுத்திருக்கின்றன என்று அவ்வக் கோயில்களிலுள்ள கல்வெட்டுக்களினால் தெரிகின்றது.

இடைக்காலத்தில் ஏற்பட்ட பல வகையான அரசியல், சமூக இயல் குழப்பங்களினால் நம் கோயில்கள் தம் கடமைகளை மறந்து நடமாடும் நம்பர் உருவங்களாகிய உயிர்களின் நலங்களில் கருத்திருத்தாமல் படமாடும் பரமர் உருவங்களுக்கு மட்டுமே பூசைகள் விழாக்கள் செய்வதோடு நின்றுவிட்டன.

வேற்று நாட்டு மதங்களாகிய இசுலாமியமும் கிறித்தவமும் நம் மக்களைப் பல வகையிலும் கவர்ந்துவிட்டன. முன்னது நாட்டையே துண்டாடிவிட்டது; பின்னது, மக்கள் வாழ்வுக்கு வேண்டிய மருத்துவம் கல்வி முதலிய வசதிகளைச் செய்து கொடுத்துப் பல்லாயிரக் கணக்கான மக்களைத் தன் வயப்படுத்திக் கொண்டது.

பேருக்கு இந்துக்களாயுள்ள மக்களிலும் பெரும்பாலோர் தம் சமய உண்மைகளைச் சிறிதும் அறியாமலும், மூடப் பழக்க வழக்கங்கள் பலவற்றை மேற்கொண்டும், கல்வி முதலிய நலங்களில்லாமல் தாழ்ந்தும் இருக்கின்றனர்.

இந்நிலையில், இந்து சமயக் கோயில்கள் மக்கள் வாழ்க்கையோடு ஒன்றி இனியேனும் தம் கடமைகளை அறிந்து மேற்கொண்டால், மீண்டும் பழம் பெருஞ் சமயமாகிய இந்து சமயம் செழித்து வளர்ந்து பயன் செய்யும்.

நிரம்பச் சொத்துள்ள இந்து கோயில்களில் கூட ஏழை எளிய தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஏதும் அறங்கள் செய்யப்படுவதில்லை. மக்களுக்குச் சமய உண்மைகளையும் சடங்குகளின் உண்மைக் கருத்துக்களையுங் கூட எடுத்து விளக்குவதில்லை; வாழ்க்கையில் ஒழுக்கமும் ஒளியும் உண்டாக வழி செய்வதில்லை. வெறும் வழிபாடும் விழாவும் செய்வதோடு நின்றுவிடுகின்றன.

வருமானத்தை, அறத்துக்கென்றும், வழிபாடு விழாக்களுக்கென்றும், அறிவு விளக்கத்துக்கென்றும் பிரித்து வைத்துச் செலவு செய்வதில்லை. இது மிகவும் வருந்தத் தக்க நிலை. இதனால் இந்த நாட்டில் மெய்யுணர்வுகள் அருகி உண்மை நலங்கள் குறைந்து குழப்பங்கள் மேலிட்டுள்ளன.

அரசியலார் இந்நிலையை அறிந்து சிறிது செயலற்றுக் கொடுங்கியிருக்கின்றனர். ஆனால், இப்போது இருக்கும் அரசியல் சிக்கல்களை நோக்க, அவர்கள் அவற்றைத் தீர்த்துக் கொண்டு ஆக்க வேலைகளில் நுழைவதற்குள் பல அழிவுக் கருக்கள் நாட்டில் முதிர்ந்து விடும்போலத் தோற்றுகின்றது.

ஆகவே, அவ்வக் கோயில்களில் உள்ள அறங்காவலர்களே தம் கடமைகளை அறிந்து, தக்கபடி தம் கோயில்களில் அறமும் அறிவும் பெருக்கி, உண்மை வாழ்வுக்கும் அருளுக்கும் மக்களைத் தகுதிப்படுத்த வேண்டும்.

சென்னை மல்லீசுரர் திருக்கோயில் அறங்காவலர்கள் இத்துறையில் எடுத்துக்காட்டாக இருப்பது மிகவும் போற்றத்தக்கது. ஏறக்குறைய நாடோறும் காலை மாலைகளில் அங்கே நல்ல சொற்பொழிவுகளும் பாராயணங்களும் நடைபெறுகின்றன. நூற்றுக்கணக்கான மக்கள் உண்மைச் சமய அறிவும் நல்லொழுக்க உணர்ச்சியும், அருளியல் அமைவும் பெற்று வருகின்றனர்.

தேவாரம் திருவாசகம் திருப்புகழ் திருநாலாயிரம் முதலிய அருட்பாடல்களை மெய்யன்புடன் பாடும் பணிக்கும், சான்றோர் தொண்டுக்கும், அறிஞர் விரிவுரைக்கும், மாணவர் கல்விக்கும் இவைபோன்ற வேறு நற்செயல்களுக்கும் அங்கே ஆதரவு கிடைக்கின்றது. மேலு மேலும் அவை சிறப்புற்று வருகின்றன.

மற்றக் கோவில்களும் இந்நன் முறைகளைப் பின்பற்றி நடந்தால், நாட்டில் நல்லுணர்ச்சிகளும் நற்செயல்களும் மிகுதிப்பட்டு மக்கள் வாழ்வு செம்மையாக இலங்கும் என்று எதிர் பார்க்கலாம்.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம்; குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்.).